[3rd November 1962

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : கூட்டுறவு சொசைடியில் விறகுக் கடை வைத்தால் ஃபாரஸ்ட் டிபார்ட் மெண்டு உதவி செய்வார்களா ?

கனம் திரு. பி. கக்கன் : விறகுக் கடை கூட்டுறவு சொசைடியில் நடத்துவதென்றால் ஆதரவு உண்டு.

Concessions

* 265 *Q.*—Dr. A. SREENIVASAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the various educational and other concessions granted to Harijans; and

(*b*) the criteria for the grant of such concessions to Harijans ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A paper[a] is placed on the table of the House.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : மதம் மாறியவர்களுக்குக் கல்விச் சலுகை சட்டத்தில் மறுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பி. கக்கன் : அரசியல் சட்டப்படி மதம் மாறியவர்கள் ஷெட்யூல் காஸ்ட் ஆகக் கருதப்படுவதில்லை.

Sugarcane

* 266 *Q.*—Sri S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount of cess on sugarcane (i) collected; and (ii) utilised during the year 1961-62; and

(*b*) how the amount has been utilised?

THE HON. SRI P. KAKKAN : (*a*) (i) The amount of cess on sugarcane collected during 1961-62 was Rs. 16,41,656.

(ii) The amount utilised during the year 1961-62 was Rs. 8,92,411.

(*b*) The amount has been utilised for Sugarcane Development, Sugarcane Research Schemes and the Road Development Schemes in the Sugar Factory areas.

திரு. எஸ். கே. சம்பந்தன் : ஐயா, இந்தத் தொகை அதிகமாக வசூலிக்கப்பட்டும் அந்தத் தொகை பூராவும் அந்தக் கரும்பு சம்பந்தப்பட்ட முன்னேற்றத்திற்கு செலவிடப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பி. கக்கன் : காரணம், ரோடுகளை அகலப்படுத்துவதற்கு இடம் கிடைக்காததுதான். அக்விஸிஷன் செய்வதில் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

திரு. எஸ். கே. சம்பந்தன் : செஸ் தொகையிலிருந்து புதிதாக ரோடு அமைக்கத்தான் இந்தப் பணம் செலவிடப்படுகிறதா ? செஸ் தொகையிலிருந்து போடப்பட்ட பாதைகளைச் செப்பனிடுவதற்கு

a Printed as Appendix II on pages 126–128